**DEPOSITION OF WITNESS**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**
- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC **.No. 265/2022**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW2
Defendant :
Court :

Name : பாண்டி
Father's/
Husband Name : முனியாண்டி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

11.03.2026. **CC.No.265/2022** அ.சா.2 பாண்டி

( எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**முதல் விசாரணை:**

1) நான் கழுகர் கடையில் குடியிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், திருப்புவனம் கிளையில் நடத்துனராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தேவி எனது மனைவி ஆவார். ராக்கு எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் தோப்பு காவல் செய்து வருகிறார். கடந்த 09.09.2021 ம் தேதியன்று நான் வேலைக்கு சென்றுவிட்டேன். அதே நாள் இரவு 07.00 மணியளவில் எனது மனைவி அ.சா.1 எனக்கு போன் செய்து மாடுமேய்க்க சென்ற எனது அம்மா ராக்கு இன்னும் வீட்டிற்கு வரவில்லை என்றும் என் மனைவி எனது அம்மா மாடு மேய்க்க சென்ற வைகை ஆற்றிற்கு சென்று பார்த்ததாகவும் அங்கு மாடு மேய்த்தவர்கள் அனைவரும் சென்றுவிட்டதாகவும் கூறினார்.

2) எனது மனைவி ஆற்றுக்குள் அதிகரைப்பாதையில் சென்று பார்த்தபோது மூங்கில் கம்பால் தாக்கப்பட்டு கை, தலை மற்றும் உடம்பு முழுவதும் தாக்கப்பட்டு கை எலும்புமுறிவு ஏற்பட்டு எனது அம்மா மயங்கிய நிலையில்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.11 18:35:07 +0530

இருந்ததாக கூறினார். அதன் பின்பு தான் ஆட்டோ மூலமாக எனது அம்மாவை வீட்டிற்கு கூட்டிவந்ததாக எனது மனைவி கூறினார். எனது அம்மாவை எனது மனைவி ஆட்டோவில் வைத்து அதிகரை கூட்டிச்சென்றுள்ளார். முத்து இருளன் என்ற ஊமை எனது அம்மாவை அடித்தாக கூறினார். அதன் பின்பு எனது அம்மாவை திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றோம் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றோம்.

3) அங்கு எனது அம்மாவிற்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். அங்கு ஒரு மாதம் எனது அம்மா சிகிச்சையில் இருந்தார். எனது அம்மாவை நான் பார்த்தபோது எனது அம்மாவிற்கு இடதுகை முறிந்த நிலையில் இருந்தது. தலையிலும் காயம் ஏற்பட்டிருந்தது. இது சம்பந்தமாக எனது மனைவி அ.சா.1 புகார் கொடுத்தார். சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1) நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விசயங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றாலும் கேள்விபட்ட வகையில் தான் தெரியும் என்றாலும் சரிதான். நான் சம்பவத்தன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணியில் இருந்து வந்தேன் என்றால் சரிதான். நான் எனது தாயாரை மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல நான் வேலையில் இருந்து வந்து எனது தாயாரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன்.

2) சிவகங்கை அரசு மருத்துவமனையில் எனது தாயாரை சேர்க்கும்போது இரவு 10.00 மணி இருக்கும் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு யார் ஆட்டோ ஓட்டிச் சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் நான் வழிப்போக்கு ஆட்டோவில் அழைத்துச் சென்றேன். என்னை எப்போது போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவம் நடைபெற்று 2 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். புகார் கொடுத்தது எனது மனைவி என்றால் சரிதான். புகாரில் என்ன சொல்லியுள்ளார் என்ற விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான்.

3) சம்பவம் நடைபெற்ற இடத்தில் குற்றச்சம்பவம் நடைபெறுவது வழக்கம் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவ இடமானது ஆள்நடமாட்டம் இல்லாத பகுதி என்றால் சரிதான். எனது தாயாருக்கு ஏதோ ஒரு வகையில் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி மூன்றாம் நபர் துாண்டுதலின் பேரில் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் எனது மனைவி கொடுத்த பொய்யான புகாருக்கு

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.11 18:35:13 +0530

ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி எனது தாயாரை எந்த காலத்திலும் தாக்கியது இல்லை என்றாலும் எனது தாயாருக்கு ஏற்பட்ட காயத்திற்கும் ஆஜர் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.11 18:35:19 +0530

**<u>DEPOSITION OF WITNESS</u>**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**
- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC **.No. 265/2022**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW3
Defendant :
Court :

Name : ராக்கு
Father's/
Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

11.03.2026. **CC.No.265/2022** அ.சா.3 ராக்கு

( எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**<u>முதல் விசாரணை</u>:**

1) நான் கழுகர் கடையில் குடியிருந்து மாடுமேய்க்கும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தேவி எனது மருமகள் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் தான் என்னை அடித்தவர் ஆவார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு மாலை 04.00 மணியளவில் மாடு மேய்ப்பதற்காக எங்கள் ஊரில் உள்ள ஆற்றிற்கு அருகே மாடுகளை பத்திக்கொண்டு சென்றேன். அப்போது ஆஜர் எதிரி அங்கு வந்து நான் கையில் வைத்திருந்த மூங்கில் கம்பால் என்னை அடித்து தண்ணிக்குள் தள்ளிவிட்டார்.

2) அவர் என்னை கம்பால் உடம்பு முழுவதும் அடித்தார். நான் மாடு பத்திக்கொண்டு செல்ல நேரமானதால் எனது மருமகள் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்து என்னை தண்ணீருக்குள் இருந்து வெளியே இழுத்து என்னிடம் விசாரித்தபோது ஊமையன் என்னை அடித்ததாக அ.சா.1 எனது மருமகளிடம் சொன்னேன். ஆஜர் எதிரி அடித்ததில் தனக்கு கைகளில் அடிப்பட்டதாக சொல்லி சாட்சி தனது கைகளை காட்டினார்.

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.11 18:35:25 +0530

3) ஆட்டோ மூலமாக என்னை எனது மருமகள் அ.சா.1 திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். ஒரு மாத காலம் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். அங்கு எனக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மேற்கண்ட சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் உள்ளது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1) அ.சா.1 தேவி எனது மருமகள் என்றால் சரிதான். அ.சா.2 பாண்டி எனது மகன் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 4 சமயமுத்து, பட்டியல் சாட்சி 6 பாக்கியம் ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 5 தர்மராஜ் என்பவரை எனக்கு தெரியும் எனது ஊரைச்சேர்ந்தவர் மற்றும் பழக்கமுடையவர் என்றால் சரிதான் அவருக்கு வியாபாரத்திற்கு நான் பால் ஊற்றுகிறேன்.

2) ஆஜர் எதிரி என்னை தாக்கியபோது சம்பவ இடத்தில் யாரும் இல்லை என்றாலும் சம்பவத்தை யாரும் பார்க்கவில்லை என்றாலும் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே கருவேல மரங்கள் மண்டியிருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆற்றின் அகலம் சுமார் 1/2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். ஒரு கரையிலிருந்து மற்றொரு கரையில் இருப்பவர்களை பார்த்தால் தெரியாது என்றாலும் கருவேல மரங்கள் மண்டியிருக்கும் என்றாலும் சரிதான்.

3) நான் ஆற்றில் நடுப்பகுதியில் அடிபட்டு கிடந்தேனா அல்லது கரையை ஒட்டி கிடந்தேனா என்றால் ஆற்றின் நடுப்பகுதியில் கிடந்தேன். நான் அவ்வாறு நடுப்பகுதியில் கிடந்தபோது மயக்க நிலையில் இருந்தேன் என்றால் சரிதான் நான் பேச்சுமூச்சு இல்லாமல் இருந்தேன். சம்பவம் நேரமானது மதியம் 02.00 மணி இருக்கும் என்றால் சரிதான். நான் தண்ணீரில் 2 மணி நேரம் மயக்கமாக இருந்திருப்பேனா என்றால் 2 மணி நேரம் இருந்திருப்பேன்.

4) எனது மருமகள் எத்தனை மணிக்கு சம்பவ இடம் வந்தார் என்றால் மாலை 05.00 மணி இருக்கும். எனது மருமகள் வந்த நேரம் ஆஜர் எதிரி அங்கு இல்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 4 சமயமுத்துவோடு நான் மாடு மேய்க்க செல்வது வழக்கம் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு எந்த ஆட்டோவில் வந்தேன் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுத்த விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான்.

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.11 18:35:31 +0530

5) சம்பவ சமயத்தில் நான் மாட்டு தொழுவத்தில் விழுந்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் இருப்பதாக சொல்லப்படும் மருத்துவ ஆவணங்கள் எதையும் நான் போலீசாரிடம் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். போலீஸ்காரர்களும் என்னிடம் கேட்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நிறைய குற்றச்சம்பவங்கள் நடைபெறுவது வழக்கம் என்றால் சரிதான். ஆஜர் எதிரி என்னை தாக்கவில்லை என்றாலும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் ஆஜர் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

6) எனக்கு வேறு வழிகளில் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி யாரோ தூண்டுதலின் பேரில் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஆஜர் எதிரியின் மீது எனது மருமகள் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**.

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.11 18:35:36 +0530